**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.134/2021**

தேதி: 07.07.2026

பெயர் : சுதர்சனம் (வா.சா.1) த/பெ: வீரபத்திரன்

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள முன் தொகையான ரூ.4,00,000/- வட்டி தொகையான ரூ.3,25,000/- சேர்த்து திருப்பி பெற்றுக்கொள்ள நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். தாவா சொத்து குறித்து ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரம் எனக்கு வழங்காமல் கிரைய முன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்தக்கோரி தீர்ப்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன். பிரதிவாதி மேற்படி தொகையை 3 மாதத்தில் திருப்பி தருவதாக கேட்டுள்ளதால் அவருக்கு 3 மாத கால அவகாசம் வழங்க எனக்கு ஆட்சபேனை இல்லை. 3 மாத காலத்திற்குள் பிரதிவாதி மேற்படி கிரைய முன் தொகையை வட்டியுடன் மொத்தமாக மேலே கண்டவாறு திருப்பி செலுத்திவிட்டால் நான் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொடுக்க சம்மதிக்கிறேன் என்றால் சரிதான்.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

## <u>OS.No.134/2021</u>

தேதி: 07.07.2026

பெயர் : ரவிமணி (வா.சா.3) த/பெ: தேக்கன்

**<u>குறுக்குவிசாரணை</u>**

1. வாதி பிரதிவாதியை எனக்கு தெரியும். இவர்கள் இருவரும் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்து குறித்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்ட விவரம் எனக்கு தெரியும். கிரய ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். தாவா கிரைய ஒப்பந்தம் கடனுக்காக ஏற்பட்ட பத்திரம் என்பதால் பிரதிவாதி அவர் பெற்று கொண்ட கிரைய முன் தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக கூறுகிறார், அதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.